# புறநானூற்றில் பெருமிதம்

***செ. தாமரைச்செல்வி***
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் - 21112014022022
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தமிழாய்வு மையம், தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

***முனைவர் ச. மல்லிகா***
நெறியாளர் & இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை, தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6436

## ஆய்வுச் சுருக்கம்

*இலக்கியம் வாழ்வியல் உண்மையின் அடிப்படையில் அமைவது மட்டுமன்றி வாழ்க்கையின் உள்ளீடான நெறிமுறைகளையும் உணர்த்த வேண்டுவது அதன் கடமையாகும். வாழ்ந்து சிறந்த தமிழரின் சிறப்பினை எடுத்துரைக்கும் பெருமையுடையது, புறநானூறு சங்ககால மக்களின் பெருமித உணர்வுகளைக் காட்டுகின்ற நூல்களில் புறநானூறு முதன்மை இடம் பெறுகின்றது. புறநானூற்றில் பெருமிதச் சிறப்புகள் நிறையவே காணக்கிடக்கின்றன. கல்வி, வீரம், புகழ், கொடை போன்ற பெருமிதச் செய்திகளைப் புறநானூறு எடுத்தியம்புகிறது. களிறு எறிந்து பெயரும் காளையரின் வீரமிக்க பாடல்களுக்கு இத்தொகை நூலில் பஞ்சமில்லை. புறவாழ்க்கை என்பது போர்க்களத்தில் நடத்துகின்ற வீரச்செயல்கள் மட்டுமன்று தன்னுடையவாழ்க்கையைநடத்துவதற்காகமக்கள்கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்திருந்ததுடன் கல்வி பெற்றவனைச் சாதி வேறுபாடு காட்டாது போற்றியுள்ள பாங்கினையும் அறிய முடிகிறது. புறநானூற்று கால மக்கள் கல்வி, வீரம், புகழ், கொடை ஆகிய நான்கு நிலைக்களன்களைப் பெற்று பெருமித வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றனர் என்பதைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

சங்ககாலத்தினைத் தமிழர்களின் பொற்காலம் என வழங்குவர். அக்காலத்தில் பண்டைத்தமிழ் மக்களின் நாகரிகமும் பண்பாடும் உலகம் போற்றும் உயரிய சிறப்புடையனவாக திகழ்ந்தன. இத்தகைய சிறப்பினைப் புறநானூற்றின் வாயிலாக அறிய முடிகிறது. புறநானூறு மக்களின் உள்ளத்து உணர்வுகளைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது. பண்டைத்தமிழ் வேந்தர், புலவர், மக்கள் ஆகியோரின் கல்வி மேம்பாடு, வீரம், கொடைத்திறம், புகழ் ஆகியவற்றை சுவையோடு எடுத்துக் காட்டுவனவாக விளங்குகின்றன.

பெருமிதத்தின் வெளிப்பாடான கல்வி, தறுகண், இசைமை, கொடை முதலிய நான்கும் பெருமை தருவதற்குரியன என்பதோடு மட்டுமல்லாமல் தனிமனித ஒழுக்கத்தையும் சமுதாய மேம்பாட்டையும் சிறப்படையச் செய்வன. புறநானூற்றில் பெருமிதத்தின் நான்கு நிலைக்களன்களும் இடம்பெற்று பெருமிதம் சிறப்பாகத் தோன்றுகின்றன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## மெய்ப்பாடுகள்

தொல்காப்பியர் மெய்ப்பாடு என்பதனைச் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். மக்கள் தம் உள்ளத்து உணர்ச்சிகளைப் புறத்தே புலப்படுத்துவது நல்ல மெய்ப்பாடு எனப்பட்டது. "மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று"[1] என்கிறார் இளம்பூரணர். "உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளியிடுதல்"[2] என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

மெய்ப்பாட்டினை வடநூலார் "ரசம்" என்று குறிப்பர். சிருங்காரம், கருணை, வீரம், ரௌத்திரம், ஹாஸ்யம், பயானகம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம் என்னும் ஒன்பது சுவைகளை நவரசம் என்று வழங்குவர்.

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப"[3]**

**(தொல்பொருள் 247)**

என்று தொல்காப்பியர் எண்வகை மெய்ப் பாடுகளை எடுத்துரைக்கின்றார். இத்தகைய மெய்ப்பாடுகள் அகத்திற்கும், புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகளைக் கொண்டு திகழ்கிறது. இம்மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் நான்கு நான்கு நிலைக்களன்களைப் பெற்று முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

## பெருமிதத்தின் வெளிப்பாடு

பெருமிதம் என்பது வீரம் எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல் எனப் பேராசிரியர் கூறுகிறார். கல்வி, வீரம், புகழ், கொடையின் காரணத்தால் மற்றவர்களை விட உயர்ந்திருப்பதாகநினைக்கும்பொழுது அவருடைய உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி பெருமிதம் எனப்படுகிறது.

பெருமிதம் என்னும் மெய்ப்பாடானது கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கு நிலைக்களன்களைப் பெற்று வரும் என்பதை,

**"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"[4]**

**(தொல் பொருள் 253)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இப்பெருமிதமென்னும் மெய்ப்பாட்டிற்கு உரை வகுக்கும் இளம்பூரணர் கல்வியானும், தறுகண்மையாலும், புகழ்மையானும், கொடையானும் என இந்நான்கும் பிறனொருவனின் மிகுந்த வழி பிறக்கும் மகிழ்ச்சி என்று வெளிப்படுத்துகிறார்.

கல்வியென்பது மனிதனின் அறிவை வளர்த்து நெறிப்படுத்துவதையும், தறுகண் என்பது ஒருவன் தன்மனவலிமையையும் உடல்வலிமையையும் மாற்றார்க்கு அஞ்சாது வெளிப்படுத்துவதாகும். இசைமையென்பது பிறரால்போற்றப்படுவது. கொடையென்பது தம்மிடம் இருப்பதை மற்றவர்களுக்கு கொடுத்து உதவும் உயர்ந்த பண்பாகும். இத்தகைய பெருமிதத்தின் நான்கு நிலைக்களன்களும் புறநானூற்றில் சிறந்து விளங்குகிறது.

## கல்வி

தமிழ்நாட்டு வரலாற்றில் கல்வியில் சிறந்த காலமாகத் திகழ்ந்தது சங்ககாலம் என்று ஆணித்தரமாகக் கூறுவர். இக்காலத்தில்தான் அரசாளும் மன்னனும் அவன் அடியில் வாழும் மக்களும் ஆடவரும், பெண்டிரும், அந்தணரும், வேளாளரும், வணிகமும், சோதிடரும் இன்னும் பற்பல தொழில்களில் துறைய

போய மக்களும் வெவ்வேறு குலத்தினரும், வேறு வேறு மதத்தினரும் வேறுபாடின்றிக் கல்வி கற்றனர். கவிதைகளும் இயற்றினர்.

அறநெறி பிறழாத வாழ்க்கைக்குக் கல்வி முக்கிய பங்காற்றுகிறது. கல்வி சமூக வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கக் கூடிய ஒன்று தனிமனித முன்னேற்றத்திற்கும் நாகரீக சமூகத்தை உருவாக்குவதற்கும் கல்விக்குப் பெரும் பங்கு உண்டு. உலகத்து உயிரினங்களில் மனித இனம் தலைசிறந்தது. ஏனெனில் மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஆராய்ந்து அறியும் பகுத்தறிவு மனித இனத்திற்கு மட்டுமே உண்டு. அத்தகைய அறிவின் வளர்ச்சிக்கு பண்படுத்தி அறவழியில் நடக்க உதவுகின்றது.

மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல கல்வியின் இன்றியமையாமையினை நன்கு உணர்ந்திருந்தனர். கல்வி கற்றுத் தருகின்ற ஆசிரியனை தெய்வத்திற்கு இணையாகப் போற்றினர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதில் குருவுக்கு அளித்த முதன்மையை உணர முடிகிறது. ஆசிரியருக்குத் துன்பம் நேரிடும் போது, பல உதவிகள் செய்தும், மிகுந்த பொருள் கொடுத்தும் ஆசிரியரை வழிபட்டு வணங்கி நின்று கல்வி கற்க வேண்டிய அவசியத்தை,

**“உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல்”**[5]

***(புறம் : 183)***

வேண்டும் என்று பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடுவதிலிருந்து கல்வியின் இன்றியமையாமையினை அறிய முடிகிறது. இதனை,

**“உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லாதவர்”**[6]

***(குறள் : 395)***

என்கிறார் வள்ளுவர். செல்வந்தர்களின் முன் உதவி கேட்கும் எளியவர் பணிவுடன் நிற்பது போன்று ஆசிரியரிடம் பணிந்து நின்று கல்வி கற்பவரே அறிவில் சிறந்தவர் என்கிறார். கல்வி கற்பவர் பணிந்து நின்று கற்க வேண்டும் என்பது புலனாகிறது.

நாட்டையாளும் மன்னனும் அறிவுடையவனைத் துணைக் கொண்டு அவன் அறிவுரைப்படி நடப்பான் என்பதனை,

**“ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக வென்னா தவருள்**
**அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்”**[7]

***(புறம் : 183)***

என்கிறது புறநானூறு. ஒரு குடியில் பிறந்தவர்களில் மூத்தவன் கல்வி கற்காத போது இளையவன் கல்வி கற்றிருப்பின் அவனுக்கே அரசனும் மரியாதை செய்வான் என்பது புலனாகிறது. இதனை,

**“அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்”**[8]

என்று கல்வி கற்ற ஒருவனை அரசனும் விரும்புவான் என்கிறது வெற்றிவேற்கை.

கடவுளுக்கு ஒப்பாகப் போற்றப்படும் தாய் தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளிடம் எக்காரணம் கொண்டும் வேறுபாடு காட்டமாட்டாள். அத்தகைய தாயின் மனம் கூட கல்லாதவனை விடுத்து கற்றவனையே நாடுவதை,

**“பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்**
**சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்”**[9]

***(புறம் : 183)***

என்று புறநானூறு சுட்டுகின்றது. அந்நாளில் நாடுகாக்கப் பகைவரோடு போரிட்டு வெற்றி அடைந்த வீரனைப் போற்றியிருக்கின்றனர். ஆனால் தாய் தன் வயிற்றில் பிறந்த மகன்களில் மூத்தவன் வீரனாக இருப்பினும் இளையவன் கல்வி உடையவனாக உள்ளான் என்பதை பெருமிதத்துடன் கூறுவதை,

**“ஈன்ற தாயோ வேண்டா ளல்லள்**
**கல்வியெ னென்னும் வல்லாண் சிறாஅன்”**[10]

***(புறம் : 346)***

என்று அண்டர்மகன் குறுவழுதியார் இளையவன் பெற்ற கல்விச்சிறப்பினால் தாய் பெருமிதம் அடைவதைக் குறிப்பிடுகிறார். இதனை

**“எரியழல் காணின் இகழ்ப ஒரு குடியிற்**
**கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் - கற்றான்**
**இளமைபா ராட்டு முலகு”**[11]

***(நான்மணிக்கடிகை 63)***

என்கிறது நான்மணிக்கடிகை. கல்வியறிவு உடைய ஒருவனையே தாயும் குலமும், அரசும், நாடும் பாராட்டுகிறது.

கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு அவர்கள் எங்கு சென்றாலும் ஆற்றுணவு கொண்டு செல்ல வேண்டியதில்லை. கற்றவர்க்கு உணவு கிடைக்கும் என்பதை

**"எத்திசைச் செலினு மத்திசைச் சோறே"[12]**

**(புறம் : 206)**

என்று ஔவையார் உணர்த்துகின்றார். இதனை

**"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு**
**வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்**
**ஆற்றுணா வேண்டுதில்"[13]**

**(பழமொழி நானூறு : 55)**

என்கிறது பழமொழிநானூறு. அறிவே அனைத்து ஆற்றலும் என்பதற்கு ஏற்பக் கல்வி கற்றவர்கள் அறிவுடையவர்கள். அவர்கள் எங்கு சென்றாலும் பொன், பொருள் எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. அவர்களுக்குக் கல்வியறிவினால் மதிப்பும், மரியாதையும் கூடுகிறது. அவர்கள் பிற இடங்களுக்குச் சென்றாலும் உணவு எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. அந்நாட்டைத் தம் கல்வியறிவால் தம் நாடாகக் கருதுவர். அங்குள்ள மக்களும் கல்வியறிவு உடையவர்களுக்கே முதன்மை கொடுப்பர் என்பதையும் உணர முடிகிறது.

கல்வி அறிவுடைய புலவன் வறுமை நிலையில் உள்ள போதும் பிறரிடம் இரந்து பொருள் கேட்கமாட்டான். தன் திறமையை வெளிப்படுத்தியே பரிசுகள் பெறுவான். மன்னனைக் காணச்சென்ற பெருஞ்சித்திரனாரை அழைத்து "இது கொண்டு செல்க" என்று பல பரிசுப் பொருட்களைக் கொடுத்தான் அவரின் புலமை அறியாது மன்னன் கொடுத்த பரிசுப் பொருட்களை வேண்டாம் எனத் துணிவுடன் மறுத்துரைக்கின்றான்.

**"காணா தீத்த விப்பொருட் கியானோர்**
**வாணிகப் பரிசில னல்லேன் பேணித்**
**தினையனைத் தாயினு மினிதவர்**
**துணையள வறிந்து நல்கினர் விடினே"[14]**

**(புறம் : 208)**

என்று புறநானூறு கல்வி மனிதனை எல்லா நிலைகளிலும் உயர வைக்கிறது. நன்மை, தீமையை அறவழியில் செல்லத் துணைபுரிகிறது. புலவனின் தகுதியறிந்து வரவேற்று மிகச் சிறிய அளவு பரிசு என்றாலும், அப்பரிசு மட்டுமே கற்றறிந்த புலவனுக்குப் பெருமை தரக்கூடியது என்பதை தெளிவுப்படுத்துகிறது. இவற்றின் மூலம் மன்னன் புலவனின் திறமையறிந்து கொடுத்த பொருளை மட்டுமே பெற்றிருக்கின்றனர்.

தாய் மட்டுமின்றி உலகாண்ட மன்னர்களும் கல்வியைப் போற்றியுள்ளனர். கல்வி மனிதனைக் கீழ்தட்டிலிருந்து மேல்தட்டிற்கு உயர வழிவகுக்கிறது. தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவனாலும் கல்வியைக் கற்று உயர்நிலை மாந்தரை அடிபணிய வைக்கும் வித்தையை கல்வி அவனுக்குக் கொடுக்கின்றது. கல்வி ஒழுக்கத்தையும், உயர்ந்த மேன்மையையும் அடைய வழி செய்கின்றது. மனிதன் அறிவுள்ளவன். அவ்வறிவை வளர்த்துக் கொள்வதற்குக் கல்வி இன்றியமையானது. நல்ல கல்வி ஒருவனைச் சிறந்த பண்புள்ளவனாக மாற்றவும், சமுதாயத்தில் குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்கும் உறுதுணை செய்கிறது. சமுதாயத்தின் உயர்வுக்குக் கல்வி மிகமிகத் தேவை என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**தறுகண்**

மனிதன் சமூகத்தில் நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது நல்லனவற்றைச் சாதிக்கக் கூடிய ஆற்றல் பெற்ற வல்லவனாகவும் இருக்க வேண்டும். நன்மையைப் பெறத்துடிக்கும் வன்மை இல்லையேல் நானில மக்களின் நகைப்புக்கு உள்ளாக நேரிடும். பண்டைத் தமிழ் மக்கள் காதலும் வீரமும் இரு கண்களெனப்

போற்றினர். தறுகண் என்பது மனிதனோடு தோன்றியது. பண்டைத் தமிழர்கள் வீரவுணர்வு மிக்கவர்கள். வீரம் என்பது ஒருவன் தன் மனவலிமையையும், உடல்வலிமையையும் மாற்றாருக்கு அஞ்சாமல் வெளிப்படுத்துவது எனலாம். இதனைத் “தறுகண்” என்றும் கூறுவர். தறுகண் என்பதற்கு “அஞ்சுவதற்கு அஞ்சாமை”[15] என்று கழகத்தமிழ்அகராதி குறிப்பிடுகிறது.

காளையர் அனைவரும் களத்தில் மடிவதையே சிறப்பெனக் கருதினர். போருக்குச் சென்று புண்ணிய பூமியில் இரத்தம் சிந்துவதைப் புரிப்பாய் எண்ணினர்.

**“ஒளிறுவா ளருஞ்சம் முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”[16]**

**(புறம் : 312)**

என்று புறநானூறு புகல்கின்றது. ஒளிவீசும் வாள் மோதும் போர்க்களத்திற்குச் சென்று, வீரப்போர் புரிந்து பகைவரின் யானைப் படையை வென்று, வெற்றி வீரனாகத் திரும்புவது காளையரின் கடமையென்கிறார் பொன்முடியார்.

பண்டைத்தமிழர் வீரத்தினைப் போர்க் களத்தில் மட்டுமின்றி இயல்பு வாழ்க்கையிலும் வெளிப்படுத்தியிருக்கின்றனர். “தம் தொழில் முயற்சியிலும், விளையாட்டிலும், பழக்க வழக்கங்களிலும் இயற்கைப் பண்பிலும் தமிழர் போர்க்குணம் படைத்தவராகவே விளங்கினர்”[17] என்று சி.பி.கோபால் குறிப்பிடுகிறார். மல்லாடல், ஏறுதழுவுதல் போன்ற விளையாட்டுகளும் பண்டைத் தமிழகத்தில் இருந்துள்ளன. பண்டைத் தமிழரின் திருமணங்கள் வீரத்தின் அடிப்படையில் நடை பெறுகின்றன. சீறித்துள்ளிக் கொம்புகளால் குத்திக் கொல்லுகின்ற போர்க்காளைகளைத் தழுவிப்பிடித்து எவனொருவன் அடக்குகிறானோ, அவனையே மணமகனாகத் தேர்ந்தெடுத்து தம் மகளிரை மணஞ்செய்து கொடுக்கும் வழக்கமும் இருந்திருக்கின்றது. கொல்லேற்றினை அடக்குபவனை மறுமையிலும் பெண்கள் அவ்வீரரையே மணம் செய்வதைப் பெரும் பேறாகக் கருதியதாகத் தெரிகிறது.

இளமையிலிருந்து மறப்பண்புடன் வளர்க்கப்பட்ட இளைஞர்கள் போரென்றால் பூரித்தெழும் இயல்புடையவராய் இருந்ததை,

**“போரெனிற் புகலும் புனைகழன் மறவர்”[18]**

**(புறம் : 31)**

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. இதனைச்

**“செருவேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர்”[19]**

**(அகம் : 157)**

என்று அகநானூறு போரை விரும்பி ஆரவாரிக்கின்ற சிவந்த கண்களையுடைய ஆடவர் என்று எடுத்துரைக்கின்றது.

ஊரின் பொதுமன்றத்தில் கட்டிவைக்கப் பட்டுள்ள முரசில் காற்று வந்து மோதும் போது ஏற்படும் ஒலியைக் கேட்டாலும், அவ்வொலி போருக்கழைக்கும் போர்ப்பறை ஒலி என்றெண்ணி மகிழ்வதை,

**“பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அதுபோ ரென்னு மென்னையுமுளனே”[20]**

**(புறம்:89)**

என்று ஔவையார் போராற்றலின் பெருமிதத்தைப் போற்றுகிறார்.

சங்ககாலத்தில் ஆடவர் மட்டுமின்றி, மகளிரும் மறப்பண்புடன் விளங்கினர். பெண்ணொருத்தி தம் தலைவனுக்கும், வேந்தனுக்கும் போரில் வெற்றிப்பெற்று புகழ் எய்துவதற்கேற்ப போர்கள் ஏற்பட வேண்டுமென்று விரும்புவதை,

**“ஓ.................................வேந்தனொடு**
**நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே”[21]**

**(புறம்:306)**

என்று அள்ளூர் நன்முல்லையார் சுட்டுகிறார்.

போரில் புறங்கொடாமல் போரிட்டு வீழ்ந்துபட்ட மகளின் சிதைந்த உடலைக் கண்டு மகிழ்ந்த தாயின் நிலையினை

**“சிறப்புடை யாளன் மாண்புகண்டருளி**
**வாடுமுலை யூறிச் சுரந்தன**
**ஓடாப் பூட்கை விடலை தாயக்கே”[22]**

**(புறம்: 295)**

என்று ஔவையார் பாடுகின்றார். போர்க் களத்தில் போரிட்டு மாண்டு கிடந்த மகனைக் கண்ட வீரத்தாயின் வற்றிய மூலையில் பால்

சுரந்ததை எடுத்தியம்புகிறார். இதன் மூலம் போரில் புறமுதுகிட்டு ஓடாத வீரரின் வலிமையையும், அவனைப் பெற்ற தாயின் பெருமிதம் கண்ணில் நீராக, மார்பில் பாலாகவும் சுரந்ததை அறியமுடிகிறது.

பண்டைத்தமிழர் வாழ்க்கையில் வீரம் கலந்து இருந்திருக்கின்றது. போர் என்றவுடன் பெருமகிழ்ச்சியுடன் சென்றிருக்கின்றனர். வீரர்களின் முழுமையான வீரத்தின் பெருமிதச் சிறப்பினை உணர்ந்து கொள்ள முடிகின்றது. போரில் விழுப்புண் படாத நாளெல்லாம் வீணாக கழிந்த நாள் என்று எண்ணி வருந்தி வாழ்ந்துள்ளனர்.

## புகழ்

புறநானூற்றுக் காலத்தில் வேந்தர்களும், வீரர்களும் குன்றாத புகழுடன் வாழ்ந்துள்ளனர். கல்வி, வீரம், கொடை போன்ற நற்பண்புகளில் சிறந்த ஒருவன் மற்றவர்களால் போற்றப்படுவது புகழ் என்னும் பெருமிதமாகும். இத்தகைய புகழினை இசைமை என்றும் வழங்குவர். இசை என்பதற்கு "கொடை, பண்பு, சொல், புகழ், ஓசை, பண், கூடிநிற்றல், பாட்டினிசை"[23] என்று கழகத்தமிழ் அகராதி விளக்கமளிக்கிறது.

மனிதர்கள் தம்முடைய ஒவ்வொரு நிலையிலும் மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பான நிலையில் புகழப்படவேண்டும் என்னும் விருப்பத்தினை உடையவர். புறநானூற்றில் வேந்தர்களைப் பாடும் புலவர்கள்

**"இன்னுங் கேண்மதி யிசைவெய் யோயே"[24]**

**(புறம்:213)**

**"என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே"[25]**

**(புறம்:222)**

என்று பாடுவதிலிருந்து வேந்தர்கள் புகழை மிகவும் விரும்பியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இதனை

**"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"[26]**

**(குறள்:236)**

என்று வள்ளுவர் மனிதன் தான் பிறந்ததற்கான பயனை அடைய வேண்டுமாயின் புகழைப் பெற முயற்சிக்க வேண்டுமென்று எடுத்துரைக்கின்றார்.

பழந்தமிழர் புகழ் என்றால் தம் உயிரையும் கொடுக்க முன்வந்து பல அரும்பெருஞ் செயல்களைச் செய்து புகழ்பெற விழைந்துள்ளனர். அவற்றைப்போன்று பழி கிடைக்குமாயின் உலகம் முழுவதும் கொள்வதாய் இருந்தாலும் அத்தகைய பாவச்செயலை செய்யாமல் இருந்துள்ளனர் என்பதைப்

**"புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்"[27]**

**(புறம்:182)**

என்று கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி புகழின் சிறப்பினை உலகம் உய்ய உணர்த்துகின்றார்.

புகழை விரும்பிய மன்னர்கள் நிலையில்லா இவ்வுலகத்தில் தம்முடைய புகழ் நிலைத்திருக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை உடையவர்களாக இருந்திருக்கின்றனர். அத்தகைய புகழை நிலை நிறுத்திக்கொள்ள தம் உயிரையும் விட்டிருக்கின்றனர் என்பதை,

**"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம்புகழ் நிற்இத் தாமாயந் தனரே"[28]**

**(புறம்:165)**

**"தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே"[29]**

**(புறம்:366)**

என்று புறநானூறு புகழை நிலைநிறுத்திக் கொள்ள தம்முடைய இன்னுயிரையும் கொடுத்ததை விளக்குகின்றது. இதனை

**"இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக"[30]**

**(நான்மணி:17)**

என்று நான்மணிக்கடிகை நிலையில்லாத இவ்வுலகில் ஒருவன் தான் மறைந்த பின்னும் அவனை நிலைநிறுத்த வேண்டுமானால் புகழ் பெற்றிட வேண்டுமென்பதைப் புலப்படுத்துகின்றது.

நல்லதை செய்து இமயமலைபோல் உயர்ந்து இறவாப்புகழோடு இருக்கின்ற நிலையை அடையலாம் என்பதைக்

**"கோடுயர்த் தன்ன தம்மிசை நட்டுத்**
**தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே"[31]**

**(புறம்:214)**

என்று புறநானூறு உணர்த்துகின்றன.

நம்பிநெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் இறந்தபோது பேரெயில் முறுவலார் எனும் புலவர்

**"செய்ய வெல்லாஞ் செய்தன னாகலின்**
**இடுக வொன்றோ சுடுக வொன்றோ**
**படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே"[32]**

**(புறம்:239)**

என்று பாடுகிறார். பாண்டிய மன்னன், அறம் பொருள், இன்பம் போன்றவற்றில் செய்ய வேண்டிய நல்லன எல்லாவற்றையும் செய்தான். அவன் தலையைப் புதைக்கவோ, எரிக்கவோ செய்தாலும் அவனுடைய புகழானது என்றும் அழியாது என்பதை எடுத்துரைக்கின்றார்.

புகழால் ஒருவனுக்குப் பெருமையும், மகிழ்வும் தோன்றுவது இயல்பு, மிகுந்த புகழ்ச்சியால் நாணம் கொண்ட வேந்தனையும் காணமுடிகிறது. வீரமறவன் ஒருவன் நெற்கதிர்கள் அனைத்தையும் பரிசிலர்க்கு வழங்குகிறான். பின்வந்த இரவலர்க்குச் சிற்றூரையும் தருகிறான். அதனை வியந்து உயர்ந்த வள்ளல் என்று போற்றுவதைக் கண்டு எவருக்கும் தலைவணங்காத மன்னன் நாணி தலைதாழ்த்தி வணங்கியதை,

**"அதுகண்டு, பரத்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந்**
**திறைஞ்சி யோனே குருசில்"[33]**

**(புறம்: 285)**

என்று அரிசில்கிழார் மன்னன் புகழுக்குத் தலை வணங்கியதை வியந்து கூறுகின்றார். இதன் மூலம் புகழ் உடையவர்களுக்கு உயர்நிலை உண்டு என்பதை உணர்ந்து புகழ்பெற முனைந்துள்ளனர். புகழினைப் பெற்ற வரும் அவரைப் பாடுவாரும் பொலிவு பெற்றதுடன் பெருமிதம் பெற்றும் திகழ்ந்துள்ளனர். வேந்தர்கள் மட்டுமல்லாது தம் கல்வி மற்றும் கவித்திறத்தால் புலவர்களும் புகழ் பெற்று விளங்கியதையும் உணரமுடிகிறது.

**கொடை**

தன்னை நாடி வந்த இரவலர்களுக்கும், புலவர்களுக்கும் நல்ல மனதோடு பொருட்களைக் கொடுத்து வறுமையை நீக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள் சங்ககால மன்னர்கள். தம்மிடமுள்ள பொருட்களை அடுத்தவர்க்கும் பயன்படுமாற்றையும், பொருட்கள் பெறும் போது அவர்களின் மகிழ்வு கண்டு மனநிறைவு கொள்வதும் அவர்களின் உயர்ந்த குணமாகும். "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதை நன்கு உணர்ந்து பிறர்க்குக் கொடுத்துப் பெருமிதம் கொண்டனர்.

கொடையில் சிறந்து விளங்குவது உயர்ந்த பண்பாடாகப் போற்றப்பட்டது. கொடையென்பது "அசைவியல் பொருளையும் அசையாப் பொருளையும் மறுபயனின்றித் தாமாகவே ஒருவர் மற்றொருவருக்கு மாற்றுதல்"[34] என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

சிபி மன்னன் பருந்திடமிருந்து தப்பி வந்த புறாவின் துன்பத்தை நீக்குவதற்காக துலாத்தட்டில் ஏறியமர்ந்து வரையாது கொடுக்கும் வள்ளல் தன்மையினை

**"தன்னகம் புக்ககுறுநடைப் புறவின்**
**தபுதி யஞ்சிச் சீரை புக்க**
**வரையா வீகை யுரவோன் மருக"[35]**

**(புறம்:43)**

என்று புறநானூறு சுட்டுகிறது. இதன் மூலம் கொடை கொடுத்தலில் உயிரும், உடம்பும் மட்டுமின்றி தம்முடைய உறுப்பையும் கொடுத்தச் சிறப்பினைக் குறிப்பிடுகிறது.

பொருளைப் படைத்தவர்கள் அதனைப் பிறர்க்குக் கொடுத்தலும் இல்லோர்கள் இருப்போரை நாடிச்செல்வதும் இயற்கை. அப்பெருமை விண்ணுலகில் நடைபெறுவது இல்லை. உள்நாட்டில் தான் உண்டு என்று கிள்ளி வளவனின் கொடைத்திறனைப்

**"பொலம்பூங் காவி னன்னாட் டோரும்**
**செய்வினை மருங்கி னெய்த லல்லதை**
**உடையோ ரீதலு மில்லோ ரிரத்தலும்**
**கடவ தன்மையிற் கையற வுடைத்தென**
**ஆண்டுச் செய் நுகர்ச்சி யீண்டுங் கடலின்**
**நின்னா டுள்ளுவர் பரிசிலர்"[36]**

**(புறம்:38)**

என்று ஆவூர் மூலங்கிழார் புகழ்ந்து பாடுகிறார்.

**"நல்லவுந் தீயவு மல்லகுவியிணர்ப்**

***புல்லிலை யெருக்க மாயினு முடையவை***
***கடவுள் பேணே மென்னா வாங்கு***
***மடவர் மெல்லியர் செல்லினும்***
***கடவன் பாரி கைவண் மையே"[37]***

***(புறம்:106)***

என்று புறநானூறு கொடுத்து மகிழ்வதைக் கடமையென கருதிய பாரியைப் புகழ்ந்து கூறுகிறது. நல்லது தீயது என்ற இரண்டிலும் சேராத பூங்கொத்து என்றாலும் இழிந்த இலையை உடைய எருக்கம் பூ என்றாலும் தம்மிடம் உள்ளதை மனமுவந்து கொடுக்கும் எவரையும் எத்தெய்வமும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறாது. அது போல பாரி அற்பகுணத்தை உடையவர் என்றாலும், அறிவில்லாதவர் என்றாலும் அவனை நாடி வருபவருக்கு ஈந்து உவக்கும் வள்ளல் தன்மை உடையவன் என்று போற்றுகிறது. பாரி தரம் பார்க்காது தருகின்ற வள்ளல் என்பதை பெருமிதத்தோடு வியந்து கூறுகிறது.

நாடி வந்தவர்க்குப் பொருளை எப்படியேனும் முயன்று கொடுத்தல் நற்செயலாகும் என்பதை

***"எத்துணை யாயினு மீத்த னன்றென"[38]***

***(புறம்:141)***

என்று பரணர் கூறுகிறார். இவற்றின் மூலம் பண்டைய மன்னர்கள் தாம் சேர்த்து வைத்த பொருள்களைக் கொடுத்து மகிழ்வதில் உயர்ந்த எண்ணம் கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர். தம்மை நாடி வரும் இரவலரைக் காத்தலை கடமையென உணர்ந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

## முடிவுரை

புறநானூற்றில் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளுள் ஒன்றான பெருமிதத்தின் நிலைக்களன்களான கல்வி, வீரம், புகழ், கொடை ஆகிய நான்கும் அக்கால வேந்தர்களிடமும், புலவர்களிடமும் தோன்றிப் பெருமித வாழ்வு அவர்கள் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது.

சங்ககால மக்கள் கல்வியின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்திருந்ததுடன் கல்வி கற்றவனையே பெற்ற தாயும் விரும்பிப் பெருமிதமாக கருதும் சிறப்பினை எடுத்துரைக்கின்றது. பண்டைத் தமிழர் தம் இயல்பு வாழ்க்கையில் வீரத்தை உயிராகக் கொண்டுள்ளனர். பெண்களும் தம்முடைய தந்தை, கணவன், மகன் ஆகியோர் வீரர்கள் என்பதில் பெருமிதம் அடைந்ததைக் காண முடிகிறது. புறநானூற்றுக் கால வேந்தர்கள் புகழை விரும்பியும், புகழுக்காக உயிரையும் கொடுக்க முன் வந்துள்ளனர். பழியெனின் உலகம் முழுவதும் கிடைத்தாலும் அச்செயலைச் செய்ய மறுத்துள்ளனர். அறங்களுள் சிறந்தது கொடைப்பண்பு என்று கருதியுள்ளனர். அப்பண்பு வேந்தர்களைப் புகழ்பெறச் செய்ததுடன் பெருமையும் கொள்ளச் செய்திருக்கிறது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

## தொகுப்புரை

புறநானூற்றில் பெருமிதத்தின் நிலைக்களன்களாக விளங்கும் கல்வி, வீரம், கொடை, புகழ் போன்றவற்றின் சிறப்புகளால் வியந்து, பாடல்களைப் பாடிப் போன்றியுள்ளனர். அக்கால மக்கள் பெருமித வாழ்வு வாழ்ந்து சிறந்திருக்கின்றார்கள் என்பது நன்கு வெளிப்படுகிறது. கல்வி மனிதனுக்கு மனிதப் பண்பை வளரச் செய்கிறது. அவனுடைய தகுதியை அறிந்து கொள்ளும் சுரங்கமாக கல்வி திகழ்கிறது. கல்வி கற்றவனையே சமுதாயம் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றியிருப்பது தெளிவாகிறது. மறவர்கள் இயல்பிலேயே வீர உணர்வுடன் திகழ்ந்ததை உணரமுடிகிறது. இரவலர்களைக் காக்கவும், சுற்றம் பேணவும், பிறர் போற்றவும் புகழுக்காகவும் கொடை வழங்கலை மன்னர்கள் மேற் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது. மக்களின் வறுமையைக் கொடைப் பண்பினால் நீங்கி வளமைபெறச் செய்துள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. இளம்பூரணர், தொல்காப்பியம் (பொருள்) உரை, கழகம் - ப.எண்- 362

2. மேலது - ப.எண் - 2
3. மேலது - ப.எண் - 7
4. மேலது - ப.எண் - 13
5. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு, ப.எண்.-398, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை,முதற்பதிப்பு -1947
6. டாக்டர். மு. வரதராசனார், திருக்குறள், ப.எண்-83, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை முதற்பதிப்பு - 1959
7. ஔவை,சு.துரைசாமிப்பிள்ளை,புறநானூறு ப.எண் - 398
8. வெற்றி வேற்கை ப.எண் - 105
9. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 398
10. மேலது ப.எண் - 292
11. வேணுசீனுவாசன், பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் ப.எண் - 115, கழகவெளியீடு, சென்னை - 1963.
12. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 16
13. ம.இராசமாணிக்கம் பிள்ளை, பழமொழி நானூறு ப.எண் - 120
14. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 20
15. கழகப் புலவர்குழு கழகத் தமிழ் அகராதி ப.எண் - 528 கழக வெளியீடு, சென்னை
16. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 221
17. சி.பி.கோபால், இலக்கியச்சிதறல். ப.எண் -15, லட்சுமி பதிப்பகம், கோயம்புத்தூர், முதற்பதிப்பு - 2000
18. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 88
19. புலியூர்க்கேசிகன், அகநானூறு, ப.எண் -85, சுபாபதிப்பகம், சென்னை-2018
20. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 211
21. மேலது ப.எண் - 210
22. மேலது ப.எண் - 190
23. கழகப் புலவர்குழு கழகத்தமிழ் அகராதி ப.எண் - 96
24. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 34
25. மேலது ப.எண் - 51
26. டாக்டர்.மு.வரதராசனார், திருக்குறள் ப.எண் - 49
27. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 396
28. மேலது ப.எண் - 352
29. மேலது ப.எண் - 336
30. வேணுசீனுவாசன், பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் ப.எண் - 130, கழகவெளியீடு, சென்னை - 1963.
31. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 37
32. மேலது ப.எண் - 86
33. மேலது ப.எண் - 170
34. நா.பாலுசாமி (ப.ஆ) வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி-8) ப.எண் - 75, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு - 199
35. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு ப.எண் - 118
36. மேலது ப.எண் - 107
37. மேலது ப.எண் - 240
38. மேலது ப.எண் - 297